**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO. 28/2021**

| | |
|---|---|
| Name: மலையராஜ் | Caste: |
| Father's Name: ஸ்தானிஸ்லால்<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by L.Meera Bai, Gr.III BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 13.10.2025. | |

**<u>13.10.2025</u>**

**விசாரணை தொடங்கிய நேரம் 11:28 AM**

**வா.சா. 1 – குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியும். என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய வீட்டில் இருந்து மெயின் ரோட்டிற்கு செல்லும் வழி பிரச்சனை தீர்க்க வேண்டி தாவா தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் உறுதி மொழி ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் 2 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள விவரம் உண்மை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 355/37 ஆகும். சர்வே எண் 355/36 யாருடைய பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் ஞானபிரகாசம்மாள் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது. ஞானபிரகாசம்மாள் 1 மற்றும் 2 ம் பிரதிவாதியின் தாய்வழி பாட்டி என்றால் சரிதான். மரியசூசை என்பவருக்கு ஞானபிரகாசம்மாள், ஆரோக்கியசாமி, ஸ்தானிஸ்லால் மற்றும் லூர்தமேரி என்பவர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். லூர்தமேரி மற்றும் ஆரோக்கியசாமி ஆகியோர்கள் வாரிசுகள் இன்றி இறந்துவிட்டார்கள்

என்றால் சரியல்ல. ஆரோக்கியசாமிக்கு வாரீசு இல்லை. லுர்தசாமிக்கு ஜார்ஜ் என்று சென்னையில் மகன் உள்ளார்.

என்னுடன் பிறந்தவர்கள் மரியசெல்வி, ராயப்பன், ஞானகுமார், ரெக்சிபுளோ. என்னுடைய தாயார் ஆரோக்கிய மேரி இறந்துவிட்டார். என்னுடன் சேர்ந்து என்னுடைய தந்தைக்கு 6 நபர்கள் வாரிசுதாரர்கள். ஞானபிரகாசம்மாள் என்பவருக்கு ஆண் வாரிசு இல்லை 3 பெண் பிள்ளைகள் தான். அவர்கள் முறையே எலிசபெத், ஜெசிந்தாமேரி, லூசியா. எலிசபெத் என்பவரது கணவர் பெயர் ஞானபிரகாசம். எலிபெத்துடைய வாரிசுகள் ஜெலஸ்டின் மேரி, 3 ம்பிரதிவாதி லாரன்ஸ், மலர், சங்கீதா, பரிமளா ஆகியோர்கள் வாரிசுகள். ஜெசிந்தா மேரி என்பவரது கணவர் பெயர் லூர்துநாதன். ஜெசிந்தா மேரியின் மகன் தான் 1 ம் பிரதிவாதி ஜோஸ். அவரை தவிர்த்து மெட்டில்டா, மற்றும் ஷீலா என்று இரண்டு பெண் வாரிசுகளும் உண்டு. மேற்படி 1 ம் பிரதிவாதி ஜோஸ் என்பவரது மனைவிதான் 2 ம் பிரதிவாதி தீபா.

நான் இந்த வழக்கில் தாவா சர்வே எண் 355/37 குரிய ஆவணம் ஏதேனும் என் பெயரிலோ, அல்லது என்னுடைய வாரிசுகள் அல்லது மூதாதையார் பெயரிலோ உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீடுகட்டியுள்ள இடம் 355/38 சர்வே எண்ணிற்குரியது. மேற்படி வீடு உள்ள இடத்திற்கான என் பெயரில் உள்ள ஏதேனும் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு தெற்கு புரம் நீரடி எல்லை ஆரம்பம் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள நீரடி கிராமத்தில் உள்ள சொத்தில் என்னுடைய அண்ணன் ராயப்பன் வசித்துவருகிறார். மேற்படி என் அண்ணன் வசித்து வரும் சொத்து சுமார் 2 செண்ட் விஸ்தீரணம் உடையது. அந்த சொத்து ஆரோக்கியசாமி த/பெ.

மரியசூசை என்பவரது பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஞானபிரகாசம்மாள் என்பரவது மகளான எலிசபெத் என்பவர் கடப்பாக்கம் கிராமத்தில் திருமாணம் ஆகி சென்றுவிட்டார். எலிசபெத் இறப்பிற்கு பிறகு ஞானபிரகாசம்மாள் அவரது ஊரிற்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ன் படி எத்தனை சென்டிற்கு கிரையம் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியாக தெரியவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 3 1/2 சென்டிற்குரிய கிரையபத்திரம் என்றால் சரிதான். பி.வா.ஆ.1 எழுதப்பட்ட காலத்தில் என் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி அளித்த மனுவில் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதால் பஞ்சாத்துதார்கள் முன்னிலையில் இந்த ஆவணம் இயற்றப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 355/36 மற்றும் சர்வே எண் 355/37 ற்கு தெற்கு பக்கத்தில் தான் சர்வே எண் 355/38 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 355/36 ற்கு கிழக்கு பக்கத்தில் தான் 355/37 சர்வே எண் உள்ளது என்றால் சரிதான். தாவா காலத்தில் சர்வே எண் 355/36 ல் தளவீடு பின்புறமாகவும், முன்புறம் சிமெண்ட் சீட்டு போட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிமெண்ட் சீட்டு போட்டு முடியும் இடத்திற்கும் பிளவேந்திரன் ஆனந்தன் என்பவரது இடையில் எவ்வளவு இடம் உள்ளது என்றால் 3 அடி உள்ளது. என் வீடு இருக்கும் இடத்திற்கு கிழக்கு பக்கத்தில் ஜேம்ஸ் என்பவரது இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 36 சர்வே எண் 78 சதுர மீட்டர், 37 க்கு 35 சதுர மீட்டரும், 38 ற்கு 86 சதுர மீட்டரும் உள்ளது என்றால் சரிதான். இதன் மொத்த விஸ்திரணம் 5 செண்ட் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையம் பத்திரம் 3 1/2 செண்டடிற்கு எனவும் ஆனால் மொத்த விஸ்திரணம் 5 செண்ட்

என்றாலும் இதற்கு இடையே உள்ள 1 1/2 செண்டிற்குரிய விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய வழக்குரையில் சர்வே எண் 37 ற்குரிய விவரத்தை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் நான் வீடு கட்டி வழி கோரும் 38 சர்வே எண்ணை தாவாவில் சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். ஆவணங்கள் இல்லை என்பதால் நான் மேற்படி சர்வே எண்ணை சேர்க்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 37 சர்க்கார் புறம்போக்கு சந்து என்பதை குறிப்பிடும் வகையில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா தாக்கல் செய்யும் காலத்தில் மாடிவீடு மட்டுமே இருந்தது. சிமெண்ட் சீட்டு போட்ட வீடு எதுவும் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தாவா காலத்திலும் அங்கு வீடு இருந்தது என்றால் சரிதான். பி.வா.ஆ.1 ன் படி நான் ஒப்புக்கொண்டதன் படி 3 அடி உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ல் 355 என்ற சர்வே எண் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து மரியசூசை என்பவரது வாரிசுகள் பாத்தியத்தில் இருந்தது என்றால் சரிதான். நான் கட்டியுள்ள வீட்டிற்கு எனது சகோதர சகோதரிக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். வாரிசுகள் இல்லாமல் இறந்த ஆரோக்கியசாமி என்பவருடைய சொத்துக்களுக்கு அவருடன் பிறந்தவர்கள் வாரிசுகள் ஆவார்கள் என்றால் சரிதான். நான் வீடு கட்டியுள்ள 38 சர்வே எண்ணில் நானும் அல்லது என்னுடைய தந்தையோ அல்லது என்னுடைய சகோதரர்களோ பட்டா வேண்டி மனு செய்துள்ளளோமா என்றால் இல்லை. ஆரோக்கியசாமி என்பவரது பெயரில் உள்ள வீட்டிற்கு என காண்பித்து என்னுடைய வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

எனக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் பேச்சுவார்தை இல்லை. நான் வீடு கட்டியுள்ளதாக சொல்லும் சர்வே எண்ணும் சர்க்கார் புறம்போக்கு என வகைப்படு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பொது சந்து ஆக்கிரமிப்பு என்று நான் மனுசெய்ததன் பேரில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனு கொடுக்கும் போது வா.சா.ஆ.1 என் வசம் இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 36, 37 மற்றும் 38 ஆகியவை ஞானபிரகாசம்மாள் என்பவருக்கு மட்டும் தான் குடும்ப ஏற்பட்டு முறையில் சொந்தமானது என்றால் சரியல்ல. ஞானபிரகாசம்மாள் என்பவர் எலிசபெத் திருமணம் ஆகி சென்ற கடப்பாக்கம் ஊருக்கு சென்றபோது நானாக சட்டவிரோதமாக அவரது இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்ட ஆரம்பித்தேன் என்றால் சரியல்ல. என் வழக்கின் நிலைப்பாட்டின் படி அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட தாவா சொத்திற்கு நான் எந்தவித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடக்கு தெற்கு 7.21 அகலம் என்றால் சரிதான். இதில் 3 அடி போக மீதம் உள்ள இடங்களில் பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். நீரடி கிராமத்தில் உள்ள தாவா சொத்திற்கு பின்புறம் உள்ள ஆரோக்கியசாமி, பெயரில் உள்ள சொத்து ஞானபிரகாசம்மாள், தணிஸ்லாஸ், லூர்தமேரி என்பருக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்கு தடையுறுத்து கட்டளை வேண்டும் என்று மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் விளம்புகை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவாவில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பதிலுரையில் பிரதிவாதிகள் தாவா சொத்து என்னுடையது அல்ல என்று குறிப்பிட்டும் நான் இந்நாள் வரையில் திருத்த மனு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 சர்வே எண் 36, 37, 38 ல் எந்தெந்த சொத்திற்கு உரிய

என்றவிரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணத்தில் கிழக்கு மேற்கு 15 அடி எனகவும் வடக்கு தெற்கு 90 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 36 மற்றும் 37 சேர்த்து எவ்வளவு அகலம் என்றால் 36 4.8 மீட்டரும், 37 2.2 மீட்டரும் இருக்கும் என்றால் சரிதான். மொத்தமாக எவ்வளவு அகலம் என்றால் 26 அடியாகும். மேற்படி 26 அடி அகலத்தில் வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள 15 அடி எந்த திசையில் உள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள வழக்குமூலங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் வழக்கிற்கும் முன்பே பிரதிவாதிகள் சிமெண்ட் சீட் வீடு மற்றும் தளவீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் தாவா சொத்தை பொறுத்து உரிமைகாண ஆவணம் மற்றும் அனுபவித்திற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாமல் தடையுத்தரவு கோருவதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் அனுபவித்து வருவதற்கு ஆணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா பரிகாரம் கிடைக்தக்கதல்ல என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**விசாரரணை முடிக்கப்பட்ட நேரம் 12.26 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**